[1981 ஏப்ரல் 6

நெய்வேலி நீரைப்பாசனம் குடிநீர் தேவைகளுக்குப் பயன்படுத்தும் திட்டம்.

*வினா எண். 662—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் பின்வரும் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலி நீரை அப்பகுதியில் பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்குக் கொடுக்க வேண்டும் என்று விருத்தாசலம் அணைப்பகுதி விவசாயிகள் கடந்த மூன்று ஆண்டுகளாகக் கோரி வருவதை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் எந்தெந்த ஊருக்கு அந்த நீர் கொண்டு செல்லப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அரசு முடிவு எடுக்கும்போது எந்தெந்த ஊர்கள் பயன் பெறும் என்பவை நிச்சயிக்கப்படும்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வெளியேற்றப்படும் நீர் எவ்வளவு கன அடி? அதனால் எவ்வளவு நகரங்களுக்கு, அல்லது பாசனத்திற்கு உபயோகிக்கப் படும் என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு, வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, தற்போது பருவ மழை நீருடன் நெய்வேலியிலிருந்து நிலக்கரி வாரியம் செலவின்றி வழங்கும் உபரி நிலத்தடி நீரை 23 கிராமங்களில் 2,400 ஹெக்டேர் நிலங்களில் இருபோக சாகுபடி செய்வதற்காக இப்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது முதலாவதாக சுரங்கத்திலிருந்து கிடைப்பது. இரண்டாவது சுரங்கம் வெட்டப்படுகிறபோது ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 220 முதல் 360 லட்சம் காலன் வரையில் தண்ணீர் கிடைக்கும் என்று இப்போது மதிப்பிடப்பட்டு இருக்கிறது. அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதைப் பற்றி அரசு முடிவு செய்யும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது அரசு பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். நெய்வேலி

1981 ஏப்ரல் 6]

நிலக்கரிச் சுரங்கம் வந்தபிறகு அந்தப் பகுதியில் உள்ள கிணறுகளில் தண்ணீர் வற்றிவிட்டது. ஆகவே, அந்தச் சுரங்கத்தில் இருந்து வீணாகச் சென்று கடலில் கலக்கிற கழிவு நீரை அந்தப் பகுதி மக்களின் குடிநீர் வசதியைப் பூர்த்தி செய்வதற்காக அரசு முயற்சிக்க வேண்டும். அப்படிச் செய்வதில் அரசு ஏன் கால தாமதம் செய்கிறது, உடனடியாக அதைச் செய்வதற்கு, துரிதமாகப் பரிசீலிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இப்போதே கூட கழிவு நீர் கிட்டத்தட்ட 10,000 காலன் ஒரு நிமிடத்திற்கு வெளியேறுவது அந்த ஆற்றிலே திருப்பிவிடப் பெற்று, அந்தப் பகுதியில் உள்ள நிலத்தடி நீர் பாதிக்கப்படாத அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. இந்தக் கேள்வி இரண்டாவது சுரங்கம் நெய்வேலியில் வெட்டப்படுகிறபோது கிடைக்கிற உபரி நீரைப் பற்றியதாகும். அதை எப்படிப் பயன்படுத்தலாம் என்று சிந்திக்கிறபோது குடிநீர் கொடுப்பது என்பது எல்லாம் சேர்த்துத்தான் அரசு பரிசீலித்து வருகிறது.

தர்மபுரி விவசாயக் கருவிகள் பழுது பார்க்கும் நிலையத்திலுள்ள ஆழ்கிணறு தோண்டும் இயந்திரங்கள் இடமாற்றம்

*வினா எண். 663—திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரியில் உள்ள அக்ரோ சர்வீஸ் சென்டரில் உள்ள ஆழ் கிணறு தோண்டும் இயந்திரங்கள் வேறு மாவட்டத்திற்கு மாற்றிச் செல்லப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் மீண்டும் இம் மாவட்டம் பயன்பெறும் வகையில் திரும்ப அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

'பேரா பாறை' நதியை கிழக்கே திருப்பிவிடும் திட்டம்

*வினா எண். 664—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி அரபிக் கடலில் கலக்கும் 'பேராபாறை' நதியை மேற்கு மலையைக் குடைந்து கிழக்கே திருப்பித் தமிழகத்தின் பாசனத்துக்கு ஏற்பாடு செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

TRUTH ALONE TRIUMPHS